(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

மாணவ-மாணவியருக்கு மட்டும்) **SUBJECT CODE** **20 UTM 407**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2023**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**நான்காம் பருவம்** **நேரம் : 3 மணி**

**பகுதி – III**

**பொருளிலக்கணம் (அகப்பொருள், புறப்பொருள்)**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)**

1. ”ஐந்திணை உடையது ............... காமம்”.

(அ) கைக்கிளைக் (ஆ) அன்புடைக் (இ) பெருந்திணைக் (ஈ) இவை எதுவும் இல்லை.

2. களவொழுக்கத்தின் கண் நிகழும் பிரிவு எது?

(அ) காவற் பிரிவுஇ (ஆ) தூதிற்கு அகறல்இ (இ) பரத்தையற் பிரிவு (ஈ) ஒருவழித்தணத்தல்

3. செவிலியின் மகள் யார்?

(அ) தோழி (ஆ) விறலி (இ) தலைவி (ஈ) பாடினி

4. ‘விரிச்சி’ என்பதன் பொருள் யாது?

(அ) அரண் (ஆ) போர் (இ) நற்சொல் (ஈ) விரிந்தது

5 செங்கோல் மன்னனை உழவனாக உருவகித்துப் பாராட்டுவது............

(அ) மறக்களவழி (ஆ) களவேள்வி (இ) அரசமுல்லை (ஈ) மறமுல்லை

**ஓரிரு சொற்களில் அல்லது தொடர்களில் விடையளிக்க.**

6. முதற்பொருள் எத்தனை வகைப்படும்?

7. வன்புறையின் வகைகளைச் சுட்டுக.

8. பாங்கற் கூட்டம் என்றால் என்ன?

9. ’புண்ணொடு வருதல்’ – சிறுகுறிப்புத் தருக

10. நூழில்இ நூழிலாட்டு முதலான துறைகள் இடம்பெறும் திணை எது?

(த.பி.பா.)

## பகுதி – ஆ (5 x 4 = 20 மதிப்பெண்கள்)

11. (அ) பெரும்பொழுது, சிறுபொழுது - விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) குறிஞ்சித்திணைக்குரிய முதல், கரு, உரிப் பொருட்களைத் தொகுத்தெழுதுக.

12. (அ) இயற்கைப் புணர்ச்சி பற்றி நீவிர் அறிவன யாவை?

(அல்லது)

(ஆ) தெளிவு, பிரிவுழி மகிழ்ச்சி, பிரிவுழிக் கலங்கல், இடந்தலைப்பாடு – குறிப்பு வரைக.

13. (அ) உள்ளப்புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி - விவரிக்க.

(அல்லது)

(ஆ) பாங்கிமதி உடன்பாடு என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

14. (அ) கரந்தைப் படலம் உணர்த்தும் கருத்துகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கொற்ற வஞ்சி, நெடுமொழி வஞ்சி, முதுமொழி வஞ்சி,பேராண்வஞ்சி ஆகிய துறைகள் குறித்து விளக்கம் தருக.

15. (அ) யானைமறம், குதிரைமறம், தார்நிலை, தேர்மறம் ஆகிய துறைகள் பற்றி ஐயனாரிதனார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) வாகை அரவம், அரச வாகை, முரச வாகை, களவேள்வி முதலான துறைகள் தரும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

## பகுதி – இ (4 x 10 = 40 மதிப்பெண்கள்)

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க.**
**(வினா எண்.16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும்.) (K4 & K5)**

16. கற்பில் நிகழும் பிரிவுகள் எவை? அவற்றை விவரித்துக் கட்டுரை வரைக.
17. வாயில்களுக்குரிய செயல்பாடுகளை எடுத்துரைத்துக் கட்டுரைக்க.
18. அகவாழ்வில் பாங்கன் மற்றும் பாங்கியருக்குரிய பங்களிப்பு எத்தகையது என்பதனை விரித்துரைக்க.
19. அகவாழ்வில் தலைவன் தலைவியரின் ஒழுகலாறுகளை எடுத்தெழுதுக.
20. வெட்சித்திணை வழி அறியலாகும் கருத்துகளை விவரித்து எழுதுக.
21. பாடாண் படலம் வழி நீவிர் அறிந்தனவற்றைத் தொகுத்துரைக்க.

**Ethical Paper**

********